| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 31/01/2024 | முதல் | 04/02/2024 | |
| அறிக்கை எண் : | 009/ 2024 | வெளியீட்டு நாள் : | 30/01/2024 | | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (25.01.2024 முதல் 29.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-0122024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/01 | 26/01 | 27/01 | 28/01 | 29/01 | தேதி | நாள்-1 31/01 | நாள்-2 01/02 | நாள்-3 02/02 | நாள்-4 03/02 | நாள்-5 04/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 1 | 1 | 0 |
| 33 | 33 | 33 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 28 | 28 | 28 |
| 21 | 20 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 17 | 18 | 18 | 18 | 18 |
| 3 | 3 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 4 | 3 |
| 87 | 83 | 79 | 83 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 45 | 36 | 43 | 42 | 54 | | 50 | 50 | 50 | 40 | 40 |
| 9 | 11 | 13 | 8 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 6 | 6 |
| கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 1, 2 மற்றும் 3 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 27°-28° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 17°-18° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

31.01.24 மற்றும் 04.02.24 தேதிகளில் மாவட்டத்தில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : கரும்பு, திராட்சை, கால்நடை.

நிலவும் பருவச்சூழ்நிலையில் கரும்பு சாகுபடியில் மேலுரமிடுதல் நல்ல பயனளிக்கும். கிணற்றுப் பாசனமுடைய பகுதிகளில் ஒரு எக்டேருக்கு 225 கிலோ தழைச்சத்து மற்றும் 112 ½ கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் மூன்று சம பாகங்களாகப் பிரித்து கரும்பு நடவு செய்த 30, 60 மற்றும் 90ம் நாட்களில் இடுதல் வேண்டும்.

**திராட்சை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் திராட்சை பயிரில் கவாத்து செய்வதற்கு ஏற்ற காலமாகும். பொதுவாக பன்னீர், பச்சை திராட்சை மற்றும் வீரிய இரகங்களுக்கு நான்கு மொட்டு நிலையில் கவாத்து செய்ய வேண்டும்.

தாம்சன் விதையில்லா இரகங்களுக்கு இரண்டு மொட்டு நிலையில் செய்ய வேண்டும். எனினும் கணுக்களில் உள்ள மொட்டுக்களை ஆய்வு செய்து அதன்படி கவாத்து செய்தால் நன்மை பயக்கும்.

நலிந்த மற்றும் வளராத கொடிகளை ஒன்று அல்லது இரண்டு மொட்டுகள் விட்டு கவாத்து செய்தால் கொடிகள் நன்கு வளர்ச்சியடையும். கோடைக்காலப் பயிரில் டிசம்பர் - ஜனவரி மாதங்களிலும், மழைகாலப்பயிரில் மே - ஜுன் மாதங்களிலும் காவத்து செய்ய வேண்டும்.

**கால்நடை:**

வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு ஆட்டம்மை தடுப்பூசியை 3 முதல் 6 மாத வயதில் முதல் முறையும், தொடர்ச்சியாக ஆண்டுக்கு ஒரு முறையும் கோடைக் காலத்திற்கு முன்னர் போடுவது அவசியமாகும்.